தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்

# பொன்விழா ஆண்டின் மாநில அளவிலான உழவர் தின விழா 2021



## பொன்விழா ஆண்டின் உழவர் தின விழா

தமிழக உழவர்கள் நலன் கருதி, கோவையில் அமைந்துள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மாநில அளவிலான உழவர் தின விழா வருடா வருடம் நடத்தப்படுகின்றது. இந்த வருடம், இப்பல்கலைக்கழகத்தின் பொன்விழா ஆண்டினை முன்னிட்டு மாநில அளவிலான உழவர் தின விழா, வருகின்ற செப்டம்பர் 2 முதல் 4, 2021 ஆகிய மூன்று தினங்களில் உழவர்கள் உவகை அடையும் வண்ணம் கொண்டாடப்படவுள்ளது.

## சிறப்பம்சங்கள்

- ✓ தமிழக அரசின் மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் முன்னிலையில் செப்டம்பர் 2, 2021 அன்று உழவர் தின விழாவின் துவக்கம்.
- ✓ புதிய பயிர் இரகங்கள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் மேலாண்மைத் தொழில்நுட்பங்களின் வெளியீடு.
- ✓ அதி நவீனத் தொழில்நுட்பங்கள், விவசாயத் திட்டங்கள் மற்றும் சேவைகளைக் காட்சிப்படுத்தும் தொழில்நுட்பக் கருத்துக்காட்சி.
- ✓ விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்குத் தீர்வுகள் வழங்குவதற்கான தொழில்நுட்பக் கருத்தரங்குகள்.
- ✓ விவசாயிகளின் செயல்திறனை மேம்படுத்தும் வகையிலான செயல் விளக்கங்கள்.
- ✓ பயிர் விதைகள், நாற்றுக்கள், பண்ணை இயந்திரங்கள், உயிர் உரங்கள், வளர்ச்சி ஊக்கிகள், விவசாயப் பதிப்பகங்கள் விற்பனை.
- ✓ தலைசிறந்த விவசாயிகளுக்கு விருதுகள் வழங்குதல்.

*பங்குபெறுவீர் !* *பயனடைவீர் !*

dee@tnau.ac.in
0422 6611352
www.tnau.ac.in

விரிவாக்கக் கல்வி இயக்ககம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641003